**IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, GANDARVAKOTTAI**
**(CHAPTER XXIII BNSS)**

**<u>STC.NO- 254/2023</u>**

**Dated :25.02.2026**

**Deposition of witness for : P.W.3**

**List of Witness LW7 Examined as PW3 (IO)**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | அருணகிரி | வயது | : | 60 |
| தந்தை பெயர் | : | சுப்பையா | தாலுகா | : | பொன்னமராவதி |
| கிராமம் | : | காரையூர் | தொழில் | : | உதவி ஆய்வாளர் |

Solemly affirmed by Tmt. Vijayalakshmi, Junior Assistant of this court in accordance with the provisions of Act X of 1873.

**Counsel present.**

**As per the Circular of the Hon'ble High Court, Madras in ROC.No.74663/2025/F1. DATED 21.02.2025 the identify of the witness verified with their identity card.**

**Aadhar Card of the Witness verified.**

(எதிரி ஆஜர்)

**<u>முதல் விசாரணை</u>**

1) நான் தற்போது காரையூர் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். நான் கடந்த 24.10.2022 ஆம் தேதியன்று நான் ஆதனக்கோட்டை காவல் நிலைய, உதவி ஆய்வாளராக நிலைய பொறுப்பில் இருந்த போது, புதுக்கோட்டை முத்துராஜா தனியார் மருத்துவமனையில் இருந்து கிடைக்கப்பெற்ற தகவலைப்பெற்று, அங்குசென்று, அங்கு உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்த, சந்தைப்பேட்டை கிராமத்தினைச் சேர்ந்த கணபதி மகன் லெட்சுமிநாராயணன் என்பவரிடம் புகார் வாக்குமூலம் பெற்று, நிலையம் ஆஜராகி, நிலைய குற்ற எண் 153/2022 சட்டப்பிரிவுகள் 279, 337 இதச -ன் படி வழக்கு பதிவு செய்து, கணினி முதல் தகவல் அறிக்கை தயார் செய்தேன். **(கணினி முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ. 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. )**

2) பின்னர், வழக்கினை விசாரணைக்கு எடுத்துக்கொண்டு 24.10.2022 ஆம் தேதி, பிற்பகல் 02.00 மணியளவில் சம்பவ இடம் சென்று சாட்சிகள் சத்தியமூர்த்தி மற்றும் மோகன் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்து சாட்சிகளை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். (

**பார்வை மகஜர் அ.சா.ஆ. 3 மற்றும் மாதிரி வரைபடம் அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

3) பின்னர் சாட்சிகள் லெட்சுமிநாரயணன், காமராஜ், ஆகியோர்களை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் சாட்சிகளை விசாரித்ததில் வழக்கின் சம்பவம் உண்மை என்று தெரிய வந்ததால், எதிரியை தேடி வந்த நிலையில், 25.10.2022 ஆம் தேதி மதியம் 12.30 மணியளவில், தாமாக நிலையம் ஆஜரான எதிரி ராஜா என்பவரை காரணம் கூறி கைது செய்து, உரிய நடைமுறைக்கு பின் நிலைய பிணையில் விடுவித்தேன். பின்னர் வழக்கு விபத்தை ஏற்படுத்திய TN 55 S 4515 என்ற பதிவெண் கொண்ட TVS XL Super என்ற இருசக்கர வாகனத்தை, மோட்டார் வாகன ஆய்விற்கு அனுப்பி வைத்தேன்.

4) பின்னர் 23.02.2023 ஆம் தேதி புதுக்கோட்டை வட்டார போக்குவரத்து அலுவலகம் சென்று விபத்து ஏற்படுத்திய இருசக்கர வாகனத்தை ஆய்வு செய்த, மோட்டார் வாகன ஆய்வாளர் ஜெயசங்கர் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பெற்று, மோட்டார் வாகன ஆய்வு அறிக்கை பெற்று வந்தேன்.( **மேற்படி மோட்டார் வாகன ஆய்வு அறிக்கை அ.சா.ஆ. 5 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**

**5)** பின்னர் அன்றைய தினமே புதுக்கோட்டை முத்துராஜா மருத்துவமனை சென்று, அ.சா.1-க்கு சிகிச்சை அளித்த மருத்துவர் ராம்குமார் பாரதி என்பவரை விசாரித்து வாக்குமூலம் பெற்று, அ.சா.1க்கான விபத்து பதிவேடு மற்றும் காயச்சான்று பெற்று வந்தேன். **( மேற்படி விபத்து பதிவேடு மற்றும் காயச்சான்று முறையே அ.சா.ஆ. 6 மற்றும் அ.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**

**6)** மேற்படி காயச்சான்றில் அ.சா.**1**க்கு ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என கருத்துரை வழங்கப்பட்டிருந்ததால் வழக்கின் சட்டப்பிரிவுகளை **279, 337** இதச விலிருந்து பிரிவுகள் 279, 338 இதச ஆக பிரிவு மாற்றம் செய்து சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை தயார் செய்து தாக்கல் செய்தேன். **(மேற்படி சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை அ.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

**7)** பின்னர் இத்துடன் விசாரணை முடித்து வழக்கு கோப்பினை பார்வையிட்டு எதிரிக்கு எதிராக இதச பிரிவுகள் 279, 338 -ன் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:</u>**

**1)** விபத்து நடந்தவுடன் இருசக்கர வாகனத்தை நான் கைப்பற்றினேன் என்றால் சரிதான். விபத்து பற்றி தகவல் கிடைத்தவுடன் மருத்துவமனை சென்று விபத்து பதிவேடு பெற்றேன் என்றால் சரிதான். விபத்து பதிவேட்டில் கோவில்பட்டி என்ற இடத்தில் விபத்து நடைபெற்றதாக குறிப்பிடப்பட்டிருந்தது என்றால் சரிதான். அது சம்மந்தமாக நான் அ.சா.1 -ஐ விசாரித்து தெரிந்து கொண்டேனா என்றால் இல்லை. புகார் வாக்குமூலம் மற்றும் எனது விசாரணையில் அ.சா.1 மற்றும் மற்ற சாட்சிகள் யாரை விசாரித்து எதிரியின் பெயரை தெரிந்து கொண்டார்கள் என்பது குறித்து, நான் விசாரித்தேனா என்றால் இல்லை. விபத்து ஏற்படுத்தியதாக சொல்லப்படும் யாருக்கு சொந்தமானது என்று நான் தெரிந்து கொள்ளவில்லை என்றால் சரியல்ல, தெரிந்து கொண்டேன். எதிரிக்கும் வழக்கு விபத்திற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றாலும் நான் சம்பவ இடம் செல்லவில்லை என்றாலும் எந்த சாட்சியையும் விசாரித்து வாக்குமூலம் பெறவில்லை என்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை– இல்லை**

**சாட்சியின் கையொப்பம்**

**திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்குநர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம், என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு, சாட்சியிடம் படித்து காண்பிக்கப்பட்டு, விளக்கி கூறப்பட்டு, சாட்சியால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.**

SIVAPALANI Digitally signed by SIVAPALANI Date: 2026.02.25 16:34:08 +0530

**நா.சிவபழனி,**
**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**
**கந்தர்வகோட்டை.**